RMI

# முதல் திருப்புதல் தேர்வு - 2023

10 - ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

1 0 0 4 2

நேரம் : 3.00 மணி | மதிப்பெண்கள் : 100

I சரியான விடையைத் தேர்வு செய்யவும். 14 X 1 = 14

1. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?
   அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்
2. வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் எந்த ஆண்டு ஒன்றுசேர்க்கப்பட்டது?
   அ) 1975 ஆ) 1976 இ) 1973 ஈ) 1974
3. சத்யார்த்த பிரகாஷ் எனும் நூலின் ஆசிரியர் யார்?
   அ) தயானந்த சரஸ்வதி ஆ) அயோத்தி தாசர் இ) அன்னிபெசன்ட் ஈ) சுவாமி சாரதாநந்தா
4. 1933 ஜனவரி 8 எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது?
   அ) கோவில் நுழைவு நாள் ஆ) மீட்பு நாள் இ) நேரடி நடவடிக்கை நாள் ஈ) சுதந்திரப் பெருநாள்
5. கூற்று : பிரிட்டிஷ் அரசு 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.
   காரணம் : மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி ஆ) கூற்று தவறு காரணம் சரி
   இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும். ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை
6. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல் ................
   அ) 2500 கி.மீ. ஆ) 2933 கி.மீ. இ) 3214 கி.மீ. ஈ) 2814 கி.மீ.
7. ........................ என்பது ஒரு வாணிபப் பயிர்.
   அ) பருத்தி ஆ) கோதுமை இ) அரிசி ஈ) மக்காச்சோளம்
8. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள்
   அ) சிமெண்ட் ஆ) ஆபரணங்கள் இ) தேயிலை ஈ) பெட்ரோலியம்
9. தென்னிந்தியாவின் தோட்டம் என அழைக்கப்படும் ஆறு எது?
   அ) அமராவதி ஆ) காவிரி இ) கோதாவரி ஈ) பெரியார்
10. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை ..................
    அ) 3 மற்றும் 15 ஆ) 4 மற்றும் 16 இ) 3 மற்றும் 16 ஈ) 4 மற்றும் 15
11. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?
    அ) ஒரு முறை ஆ) இரு முறை இ) மூன்று முறை ஈ) எப்பொழுதும் இல்லை
12. பொருந்தாத ஒன்றினைக் கண்டுபிடி
    அ) சமூக நலம் ஆ) சுகாதாரம் இ) ராஜதந்திரம் ஈ) உள்நாட்டு விவகாரங்கள்
13. காட் (GATT) இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்
    அ) டோக்கியோ ஆ) உருகுவே இ) டார்குவே ஈ) ஜெனீவா
14. இந்தியாவில் தனி நபர்களின் மேல் விதிக்கப்படுகின்ற பெருதுவான மற்றும் மிக முக்கியமான வரி ........... அ) சேவை வரி ஆ) கலால் வரி இ) வருமான வரி ஈ) மத்திய விற்பனை வரி

II ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (28 கட்டாய வினா) 10 X 2 = 20

15. "டாலர் ஏகாதிபத்தியம்" - தெளிவுபட விளக்குக.
16. பாக்தாத் உடன்படிக்கை பற்றி அறிந்ததை எழுதுக.
17. ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்களின் நலன்களுக்காக ஜோதிபா பூலே ஆற்றிய பணிகளைக் கோடிட்டுக் காட்டுக.
18. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்.
19. இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் அன்னிபெசன்ட்டின் பங்களிப்பு யாது?
20. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

21. வெப்ப குறைவு விகிதம் என்றால் என்ன?
22. வளத்தை வரையறுத்து அதன் வகைகளை குறிப்பிடுக.
23. கடற்கரைச் சமவெளி எவ்வாறு உருவாகிறது?
24. நீதிப்பேராணை என்றால் என்ன?
25. கலடன் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டம் பற்றி நீவிர் அறிவது யாது?
26. தனி நபர் வருமானம் என்றால் என்ன?
27. தமிழ்நாட்டில் உள்ள மூன்று தொழில்துறை வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனங்களையும் அவற்றின் பங்கினையும் குறிப்பிடுக.
28. தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக.

**III ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (42 கட்டாய வினா)** **10 X 5 = 50**

29. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
1) சென்னையில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தவர் ...ராஜாஜி.
2) தேசிய சணல் வாரியத்தின் தலைமையகம் .கொல்கத்தா...... அமைந்துள்ளது.
3) நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கிடையே காணப்படும் பீடபூமி .................. ஆகும்.
4) ...................... மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தராக செயல்படுகிறார்.
5) ...................... ஆம் ஆண்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.
30. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.
31. 19-ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.
32. சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி.
33. தென்மேற்கு பருவக் காற்று குறித்து எழுதுக.
34. இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.
35. தமிழ் நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.
36. வேறுபடுத்துக. : 1) வெள்ளப்பெருக்கு கால்வாய் மற்றும் வற்றாத கால்வாய்.
2) உணவுப் பயிர்கள் மற்றும் வாணிபப் பயிர்கள்.
காரணம் கூறு : 1) மேற்கு கடற்கரைச் சமவெளி குறுகலானது.
37. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
38. பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் (OPEC) திட்டம் குறித்தும் அவ்வமைப்பு எவ்வாறு பிற நாடுகளுக்கு உதவி செய்கின்றன என்பது குறித்தும் குறிப்பிடுக.
39. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.
40. வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் யாவை?
41. கொடுக்கப்பட்டுள்ள ஆண்டுகளுக்கு இடையே ஏதேனும் 5 நிகழ்வுகளை காலக்கோட்டில் குறிக்க. 1930 முதல் 1950 வரை.
42. கீழ்க்காணும் இடங்களை இந்தியா வரைபடத்தில் குறிக்கவும்.
1) தண்டி 2) சௌரி சௌரா 3) வேதாரண்யம் 4) மீரட் 5) ஜான்சி

**IV கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி.** **8 X 2 = 16**

43. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி. ***(அல்லது)***
காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும்.
44. **கீழ்க்காணும் இடங்களை இந்தியா வரைபடத்தில் குறிக்கவும்.**
1) காரகோரம் மலைத்தொடர் 2) சிலிகா ஏரி 3) பாக் நீர் சந்தி 4) மக்களடர்த்தி மிகுந்த இந்திய மாநிலம் 5) கரிசல் மண் பகுதி 6) தார் பாலைவனம் 7) கொச்சின் 8) ரான் ஆப் கட்ச்.
***(அல்லது)*** **கீழ்க்காணும் இடங்களை தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்கவும்.**
1) சோழமண்டல கடற்கரை 2) பாபநாசம் 3) தொட்டபெட்டா
4) பூண்டி சத்தியமூர்த்தி நீர்த் தேக்கம் 5) கிழக்குத் தொடர்ச்சி மலை 6) வைகை அணை
7) சென்னை 8) மதுரையையும், கன்னியாகுமரியையும் இணைக்கும் சாலை வழி.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com